### பிரதமர் இந்திராவை சந்திப்பதற்கு முன்

# இந்தியாவுடன் ராஜீய உறவுகள் ஏற்படுத்த பூட்டோ விருப்பம்!

கராச்சி, ஏப். 24

இந்தியாவுடன் மீண்டும் ராஜீய உறவுகளை ஏற்படுத்திக் கொள்ள பாகிஸ்தான் அதிபர் ஜனாப் சுல்பிகார் அலி பூட்டோ விருப்பம் தெரிவித்துள்ளார்.

திருமதி இந்திராவுக்கும் தமக்குமிடையில் நடைபெறவிருக்கும் உயர்மட்டப் பேச்சுக்கள் ஆரம்பமாவதற்கு முன்னரே இரு நாடுகளுக்குமிடையில் ராஜீய உறவுகளை ஸ்தாபித்துக் கொள்ள தமக்கு விருப்பம் உண்டு என ஜனாப் பூட்டோ பத்திரிகை நிருபர்களிடம் கூறியிருக்கிறார்.

திருமதி காந்தியுடன் நடத்தவிருக்கும் பேச்சுக்களில் ஷேக் முஜிபுர் ரஹ்மான் கலந்து கொண்டாலும் கூட தமக்கு கவலையில்லையென்று ஜனாப் பூட்டோ தெரிவித்திருக்கிறார்.

பாகிஸ்தானிலிருக்கும் இந்தியப் போர் வீரர்களைத் திருப்பித் தரும்படி கோரப்பட்டாலும் அதற்குத் தாம் சம்மதிக்கப் போவதாகவும் அவர் கருத்து வெளியிட்டிருக்கிறார்.

திருமதி காந்திக்கும் பூட்டோவுக்குமிடையிலான பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படுவதற்கான ஆரம்ப நடவடிக்கையாக நாளை 25-ம் திகதி ராவல்பிண்டியில் இருதரப்பு அதிகாரிகளுக்குமிடையில் பூர்வாங்க பேச்சுக்கள் ஆரம்பமாகவிருக்கின்றன. இரு தலைவர்களும் சந்தித்துப் பேசுவதற்கான அடிப்படை நிகழ்ச்சி நிரல் ஒன்றை உருவாக்குவதே இந்த அதிகாரிகள் நிலையிலான கூட்டத்தின் நோக்கமாக விருக்கும் என்று தெரிகின்றது.

இந்தியாவின் சார்பில் வெளிஉறவுக் கொள்கை வகுப்புக் கமிட்டியின் தலைவர் திரு. துர்கா பிரசாத் தர் தலைமையில் இந்த அதிகாரிகள் மட்ட பேச்சுவார்த்தைகளில் இந்திய கோஷ்டி கலந்து கொள்ளவிருக்கின்றது. பதின்மூன்று அதிகாரிகள் இந்தக் கோஷ்டியில் இருப்பார்களென்று தெரிகின்றது.

## பிரதமர் இந்திராவுக்கு கருணநிதி ஆதரவு

புதுடில்லி ஏப் 24

மத்திய அரசின் எல்லாவித முற்போக்கு நடவடிக்கைகளுக்கும் சோஷலிஸத் திட்டங்களுக்கும் தமது அரசு பூரண ஒத்துழைப்புத் தரும் என தமிழ்நாடு முதலமைச்சர் திரு மு கருணாநிதி பிரதம மந்திரி திருமதி இந்திராகாந்தியிடம் உறுதியளித்திருக்கிறார்.

நேற்று பிரதம மந்திரி திருமதி இந்திராகாந்தியை திரு மு கருணாநிதி சந்தித்துப் பேசினார். பின்னர் பத்திரிகை நிருபர்களிடம் கருணாநிதி மாநில அரசின் நிர்வாகத்தை சில மத்திய மந்திரிகள் தாக்கிப் பேசிவருவது பற்றி தலைமை அமைச்சரிடம் எடுத்துக்கூறியதாகக் கூறினார்.

தமிழ்நாட்டுக்கு விஜயம் செய்யும்படி அவர் பிரதமரைக் கேட்டுக்கொண்டதாகவும் தெரிவித்தார்.

### சோலைவரி

சுழிபுரம் திங்கள்

சுழிபுரம் கிராமசபைக்குச் சேரவேண்டிய சோலைவரியை உடன்கட்டுமாறு கிராமசபைக்குட்பட்ட பகுதிகளில் வசிப்போருக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. நேர்முகமாகவந்து சபை அலுவலகத்தில் பணத்தைக் கட்டுமாறும் கேட்கப்பட்டுள்ளது.

### அனுதாபம்

கொழும்பு, திங்கள்

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலைவர் காலஞ்சென்ற அல்ஹாஜ் முகம்மது இஸ்மாயில் சாகிப்பது மரணத்தையிட்டு தமது ஆழ்ந்த அனுதாபத்தை இலங்கையிலுள்ள ஹரிஜன யூனியன் அவரது குடும்பத்தினர் உறவினர் நண்பர் அவரது இயக்கத்தினருக்கும் தெரிவித்துள்ளது.

### நூல்நிலையம்

வவுனியா, திங்கள்

வவுனியாவில் 50 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டிமுடிக்கப்பட்ட நவீன நூல்நிலையம் அடுத்த மாதம் திறக்கப்படவுள்ளது.

## 'தமிழறிஞர் வி. க. வுக்கே குருவாக இருந்தார்''

### சதாவதானிக்கு புகழ் அஞ்சலி

வல்வெட்டித்துறை, திங்

"சதாவதானி கதிரைவேற்பிள்ளையின் புகழ் ஈழத்தில் மட்டுமல்ல தமிழ்நாடு பூராவுமே அறியும். தமிழுக்கும் சைவத்துக்கும் தொண்டுகள் பல செய்த சதாவதானி தமிழறிஞர் வி க வின் குருவாகவே அமைந்தார். சதாவதானம் செய்து கொள்வது விளையாட்டல்ல பல புலவர்கள் மத்தியில் சதாவதானம் பொருந்தியவர் என்ற புலமை நிலைநாட்டிய ஆற்றலை வெளிக்காட்டி விட்டார். அவர் பெருமையைச் சொல்லி பிறந்த நாட்டில் ஒரு வீதி அமைக்கப்பட்டிருப்பது பெருமைப்படக்கூடியதே".

பருத்தித்துறை தம்பசெட்டியில் சதாவதானி நா. கதிரைவேற்பிள்ளையின் நினைவு விழாக் கொண்டாடப்பட்டபோது அங்கு உரையாற்றுகையில் திரு. வை. க. சிவப்பிரகாசம் தமது சொற்பொழிவில் மேற்கண்டவாறு கூறினார்.

திரு சரவணைகிழார் பேசுகையில் 'தமிழ்நாட்டில் தலைசிறந்த ஓர் தமிழறிஞர் திரு வி க வின் குருவாக சதாவதானி இருந்தார் என்றால் அவர் பெருமையைச் சொல்லவும் வேண்டுமா? வீதியில் அவர் பெயர் வைத்திருப்பது மாத்திரமல்ல அகில இலங்கையிலும் அவர் புகழ் வீச முத்திரை ஒன்றினையும் வெளியிட அதிகாரிகள் முன்வரவேண்டும்' என்றார்.

திரு ச தங்கத்துரை பேசுகையில் 'மனிதன் ஒவ்வொருவனும் அன்புடன் நடந்து கொள்ளவேண்டும். சதாவதானி தன்பண்பை ஒருபோதும் கைவிட்டதில்லை தமிழுக்கும் சைவத்துக்கும் தம்மை அர்ப்பணித்து புலமைப்பரிசில் கிடைத்தற்கரிய சதாவதானி பட்டத்தையும் பெற்றுக்கொண்டார்' என்றார். திரு பொ திருச்செல்வமும் பேசினார்.

## 'சர்வாதிகார ஆட்சி ஒருபோதுமில்லை'

இங்கிரியா, திங்கள்

"நாட்டை சர்வாதிகாரமான முறையில் கொண்டு செல்லும் எண்ணம் அரசாங்கத்துக்குக் கிடையாது. ஆனால் எதிராளிகள் பொது மக்கள் மத்தியில் இப்படியான எண்ணத்தை ஏற்படுத்தப்பார்க்கிறார்கள்" என்று உதவி நிதி மந்திரி திரு. ரத்தினசிறி விக்கிரமநாயக்க கூறினார்.

இங்கிரியாவிலுள்ள ஹநன்வொட வித்தியாலய பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு சொன்னார்.

நாட்டில் ஒழுங்கு முறையில்லாமல் எவ்வித முன்னேற்றமும் ஏற்படாது என்றார் அவர். எதிர்காலச் சிறார்களின் ஒளிமயமான வாழ்வுக்குப் புதிய கல்வித்திட்டம் வழி வகுக்கிறதென்று கூறினார். புத்தகக் கல்வி மூலம் கல்வி பூரணத்துவமடைந்து விடாது என்றார் அவர்.

### கட்டுவன் ஏழாலை

### பஸ் சேவை சீர்கேடு

தெல்லிப்பழை திங்கள்

மயிலிட்டி கட்டுவன் ஏழாலை ஊடாக சேவை செய்யும் 799 இ போ ச பஸ் அடிக்கடி பழுதடைவதால், இப்பகுதியிலுள்ள பிரயாணிகள் மிகவும் கஷ்டப்படவேண்டியுள்ளதாக புகார்செய்கின்றனர்.

நோயாளிகள் வியாபாரிகள் காரியாலய ஊழியர்கள் இப்பஸ்ஸை நம்பி ஏமாற்றமடைய வேண்டியநிலைக்குள்ளாகின்றனராம். பிரசித்தி பெற்ற சுன்னாகம் சந்தை மற்றும் மருதனார்மடம் போன்ற சந்தைகளுக்கு பொருட்களைக் கொண்டு செல்லும் வர்த்தகர்கள் சந்தைமுறை நாட்களில் தனியார் வாகனங்களுக்கு அதிக பணம் செலவுசெய்து பிரயாணம்செய்ய வேண்டியிருக்கிறதாம். இதுசம்பந்தமாக இப்பகுதியிலுள்ள பிரயாணிகள் வடபகுதி இ போ ச முகாமையாளருக்கு மகஜர் ஒன்று அனுப்பிவைக்கவிருக்கின்றனர்.

### "நாமே பாதுகாக்கவேண்டும்"

குருநகர், திங்கள்

"நமது கலை கலாச்சாரங்களை நாமே பேணிப் பாதுகாக்கவேண்டும். எமக்குத் தேவையானவற்றையும் நாம் பாதுகாக்கவேண்டியவற்றையும் அடுத்தவர்கள் செய்வார்கள் என்று நம்பியிருப்பது தவறாகும்"

இவ்வாறு மண்டைதீவு தமிழிசைச் சங்கத்தின் 8-வது ஆண்டு இசைவிழாவின் முதல் நாள் நிகழ்ச்சிகளுக்குத் தலைமைதாங்கிய தீவுப்பகுதி காரியாதிகாரி திரு. பி நடராசா தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில் "இசையும் இறைவனும் ஒன்றுதான். இசையைக் கேட்டு பயிர்கள் வளர்கின்றன என்ற தத்துவத்தை இன்று விஞ்ஞான ரீதியில் கூட ஒப்புக்கொண்டுவிட்டனர்" என்றார்.

ஆனைக்கோட்டை, திங்கள்

உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாசாலையில் இருபத்தோராண்டு உதவி ஆசிரியராய்ப் பணியாற்றிய திரு செ. சின்னத்துரை கொக்குவில் இந்துக் கல்லூரியின் கனிஷ்ட பிரிவின் சிரேஷ்ட ஆசிரியராய் இடமாற்றம் பெற்றுள்ளார்.

0 9 0

சங்கானை, திங்கள்

சங்கானையில் இதுவரை இருந்த விவசாய விஸ்தரிப்பு நிலையம் சித்தன்கேணிக்கு மாற்றப்பட்டுள்ளது. இடமாற்றம் செய்யப்பட்ட இக்காரியாலயம் சங்கானை சித்தன்கேணி பிரதான வீதியில் உள்ள பாலத் திருக்கருணாமயில் அமைந்துள்ளது.

## 'யு.எஸ். துருப்புகளை 60 நாட்களில் திருப்பி அழைக்க வேண்டும்

### முன்னாள் உபஜனாதிபதி வற்புறுத்து

வாஷிங்டன் ஏப் 24

வியட்னாமிலுள்ள அமெரிக்கத் துருப்புக்கள் அனைவரையும் 60 நாட்களுக்குள் திருப்பி அழைத்துக்கொள்ள வேண்டும் என்று அமெரிக்காவின் முன்னாள் உபஜனாதிபதியும் இப்பொழுது அமெரிக்க அதிபர் தேர்தலில் போட்டிக்கு நிற்பவருமான திரு ஹியூபர்ட் ஹம்ப்ரி கூறியிருக்கிறார்.

டெலிவிஷன் பேட்டியொன்றில் பேசிய திரு ஹம்ப்ரி வியட்னாமில் அமெரிக்க ராணுவத் தலையீடு இருக்கலாகாதென்றே அமெரிக்க மக்கள் கருதுகிறார்கள். வியட்னாமிலுள்ள அமெரிக்க படைகளை 60 நாட்களில் திருப்பியழைத்துக் கொள்ளவும்வேண்டும் என்று வலியுறுத்தினார்.

### கடும் சண்டை

தென்வியட்னாமில் என்லொக் நகர் பகுதியில் ஆயிரக்கணக்கான வடவியட்னாமிய துருப்புகள் கடும் தாக்குதல் ஒன்றினை முடுக்கிவிடுப்பதாக செய்திகள் வந்து கொண்டிருக்கும் அதேசமயம் வடவியட்னாமியரின் வலுத்தாக்குதலில் ஒன்றை திருப்பியடித்து பின்வாங்கச் செய்துவிட்டதாக தென்வியட்னாமிய ராணுவத் தலைமையகம் அறிவித்துள்ளது.

தென் வியட்னாமின் மத்திய மலைப்பகுதியிலுள்ள அரசபடைகளின் ராணுவத் தளமை முகாம் ஒன்று வடவியட்னாமியரிடம் வீழ்ச்சியடைந்ததாக ஒரு செய்தி கூறுகின்றது.

என்லொக் பகுதியிலேயே கடும் சண்டை நடைபெறுவதாகக் கூறப்படுகின்றது. இங்கு தென்வியட்னாமிய படைகளுக்கு ஆதரவாக அமெரிக்க விமானங்கள் வடவியட்னாம் நிலைகள்மீது கடுமையாக தாக்கிவந்தபோதிலும் வடவியட்னாமியர் மூர்க்கத்துடன் சண்டையிட்டு வருகின்றனர். என்லொக் நகரை நாலாபக்கங்களிலிருந்தும் இவர்கள் தாக்கத் தொடங்கியிருப்பதாகக் கூறப்படுகின்றது. அமெரிக்க விமானங்கள் நேற்று ஒரு தினம் மாத்திரம் 300 தடவைகள் இப்பகுதியில் குண்டு வீசியதாகக் கூறப்பட்டது.

இதேவேளையில் அமெரிக்க ஏழாவது கடற்படை டொன்கின்குடா பகுதியில் அணிவகுத்து நிற்பதாகவும் வடவியட்னாமியரின் ராணுவ முக்கியத்துவம் வாய்ந்த நிலைகள்மீது இவை தாக்குதல்கள் நடத்திவருவதாகவும் கூறப்படுகின்றது.

## எச்சரிக்கைகளையும் நிக்ஸன் புறக்கணித்தார்!

வாஷிங்டன் ஏப் 24

நவம்பர் மாதம் இடம்பெறவிருக்கும் அதிபர் தேர்தலில் தோல்வி ஏற்படலாம் என்று ஆலோசகர்கள் எச்சரித்திருந்தபோதிலும் அதிபர் நிக்ஸன் ஹனோய் மீதும் ஹைபொங் துறைமுகம் மீதும் குண்டுவீசும்படி உத்தரவிட்டதாக தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன. ராணுவ விஷயங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும் எனக்கூறி அதிபர் எச்சரிக்கைகளைப் புறக்கணித்துவிட்டாராம். வெள்ளை மாளிகை அதிகாரிகள் இது பற்றி ஒன்றும் கூறமறுத்து விட்டனர்.

ராணுவ வெற்றிகளை விட ராஜரீக விளைவுகள் பற்றி முக்கியமாக ஆலோசிக்க வேண்டுமெனக்கூறி ஹனோய்மீது குண்டுவீசுவதை பாதுகாப்பு அமைச்சர் திரு மெல்வின் லெயார்ட் கூட ஒருகட்டத்தில் எதிர்ப்புத் தெரிவித்ததாகக் கூறப்படுகின்றது. ஆனால் பின்னர் இத்திட்டத்தை திரு லெயார்ட் முற்றாக ஆதரித்ததாக தெரிவிக்கப்பட்டது.

பொலிஸ் அதிபர்கள்

# ஜெனிவா மாநாட்டுக்கு செப்டம்பரில் செல்வர்

கொழும்பு, திங்கள் ஜெனிவாவில் மே மாதம் 15-ம் திகதி நடைபெற இருந்த லாகிரி பொருள் தடை சம்பந்தமான மகாநாடுபின் போடப்பட்டுள்ளது. மகாநாட்டை பின்போடுமாறு பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்க கேட்டுக் கொண்டதையடுத்து இம்மாநாடுபின்போடப் பட்டுள்ளது இந்தமகாநாட்டில் இலங்கையின் சார்பில் கலந்துகொள்ளவிருந்தகுழுவில் வடபகுதி பொலிஸ் அதிபர் திரு ஆர். சுந்தரலிங்கம், காலிப்பகுதி பொலிஸ் அதிபர் திரு. ஏ. நவரத்தினம் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர் இவ்விரு பொலிஸ் அதிகாரிகளும் மிகப் பொறுப்புள்ள பதவியிலிருப்பதனால் இவர்கள் இரும்மூன்று மாதங்களுக்கு இலங்கையில் திருப்பது அவசியமென்று, இவர்களும் கலந்து கொள்ள வசதி செய்யும் முகமாகவே இம்மாநாட்டைப் பிரதமர் பிற்போடுமாறு மகாநாட்டு அதிகாரிகளைக் கேட்குமாறும் தனது நிரந்தரக் காரியதரிசிக்கு உத்தரவிட்டார் என்று தெரியவருகிறது.

உலகில் மனிதனுக்கு மகத்தைக் கெடுக்கும் வஸ்துக்கள் விற்பனையாகிவருவதும் இதைத்தடுப்பதற்கு அமெரிக்கா உட்பட பல நாடுகள் முயற்சித்துவருவதும் தெரிந்ததே இதற்காக அமெரிக்கா பல லட்சம் ரூபாக்களைச் செலவிட்டு வருறது. இம்மாநாட்டில் கலந்துகொள்ளுமாறு ஆசிய நாடுகளை இம்மாநாட்டினர் கேட்டிருந்தனர் இலங்கையின் சார்பில் வடபகுதி பொலிஸ் அதிபர் திரு. ஆர் சுந்தரலிங்கம், காலிப்பகுதி பொலிஸ் அதிபர் திரு ஏ. நவரத்தினம், கொழும்பு காலால் பகுதி உதவி ஆணையாளர் திரு வலன்பெரேரா கங்கப்பகுதி உதவி ஆணையாளர் திரு. எதிர்வீரா ஆகியோர்கலந்து கொள்ளவிருந்தனர் பிரதமரின் வேண்டுகோளை அடுத்து மாநாடு பிற்போடப்பட்டுள்ளது; இம்மாநாட்டில் கலந்துகொள்வதற்கு இவர்கள் செப்டம்பரில் ஜெனிவா செல்வார்கள்.

போன்ற போதைப்பொருள்கள் கொண்டுபோகப்படுவதாகச் சர்வதேச உளவு ஸ்தாபனத்திலிருந்தும் ஐ. நா. போதைப் பொருள் பற்றிய பிரிவிலிருந்தும் கிடைக்கும் தகவல்களிலிருந்து தெரியவருகின்றது. இதசம்பந்தமாகக் கடந்தவாரம் பாதுகாப்பு வெளிவிவகார இலாகாவில் உயர்தர அதிகாரிகளால் விரிவாக ஆராயப்பட்டது

## கொழும்பு 'சப்ளை' ஸ்தலம்

சர்வதேச போதைப் பொருள் கடத்தல் வியாபாரத்தில் கொழும்பு பெரிய 'சப்ளை' ஸ்தலமாகவிருந்து வருவதாகக் கருதப்படுகின்றது

மத்திய கிழக்கு நாடுகளுக்கும் மேற்காசிய நாடுகளுக்கும் இங்கிருந்தே அபின்

—

## மாடு திருடி வெட்டியோருக்கு அபராதம்

மாவிட்டபுரம், திங்கள் மாடு களவாடி அதைப் பங்கு வெட்ட மூவருக்குத் தலா 50 ரூபா அபராதம் மல்லாகம் நீதிபதி விதித்தார்.

பலாலியைச் சேர்ந்த இராமன் சீனி என்பவருக்குச் சொந்தமான மாட்டைக் களவாடி, அதை வெட்டிப் பங்கு போட்டதாகக் குற்றஞ்சாட்டி அதேயூரைச் சேர்ந்த நடேச இராசையா வைத்தி ஞானபாக்கியம், செல்லன் வீரவாகு ஆகிய மூன்றுபேருக்கும் எதிராக இவ்வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

இவ்வழக்கு மல்லாகம் நீதிபதி திரு. ஐ சிவானந்தன் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டு பிரஸ்தாப மூன்று நபர்களுக்கும் தலா 50 ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டது.

இத்தீர்ப்பை எதிர்த்து எதிரிகள் சார்பில் ஆஜரான திரு. ஆர். ஜே. செல்வரத்தினம் அப்பீல் செய்துள்ளார்.

—

## கடும் வரட்சி

யாழ்ப்பாணம், செவ் கண்டாவளை, புலிங்க தேவன்முறிப்பு, உமையாள்புரம், பண்டிக்கட்டான் போன்ற விவசாய இடங்களில் ஏற்பட்டுள்ள வரட்சி காரணமாக கால்நடைகள் குடிக்கத் தண்ணீர் பெற முடியாது மடிகின்றன.

விவசாயிகள் பயிர்களுக்குத் தண்ணீர் இல்லாது கஷ்டப்படுகின்றார்கள் வான்பயிர்கள் வாடிவதங்கி மடிந்தன

குடியேற்ற மக்கள் இக்கொடிய வரட்சிபற்றி காணி பதிகாரியிடம் முறையிட்டுள்ளனர் [குகிய]

—

## ஆசிரியராக நியமனம்

உடுப்பிட்டி, திங்கள் தம்பனையைச் சேர்ந்த திரு. கே. இராமகிருஷ்ணன் மூதூர் மல்லிகைத்தீவு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் விஞ்ஞான ஆசிரியராக நியமிக்கப்பட்டுள்ளார்.

—

## புதிய சங்கம் அமைப்பர்

குருநகர், திங்கள் சகல கடற்றொழிலாளர்களும் அங்கம் வகிக்கக்கூடிய வகையில் புதியகடற்றொழிலாளர் சங்கம் ஒன்று இம்மாதம் யாழ்ப்பாணத்தில் நிறுவப் படவிருக்கின்றது. வடபகுதி கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கங்களின் சமாசச் செயலாளர் திரு. ஜஸ். ஸ்ரனிஸ்லாஸ் இதற்கான ஏற்பாடுகளைச் செய்துவருகிறார். இந்த புதிய சங்கத்திற்கான அங்குரார்ப்பணக் கூட்டம் இம்மாத முடிவில் யாழ். வீரசிங்க மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றது.

—

## சேவை நீடிப்புக்கு பாராட்டு

யாழ்ப்பாணம், செவ் மக்கள் குழு ஆணையாளர் திரு லயனல் பெர்னாண்டோவின் சேவைக்காலத்தை அரசு நீடித்ததற்கு கொக்குவில் உள்ளூராட்சி மன்றத்தின் மூதனாம் வட்டார மக்கள் குழுவின் முதலாவது கூட்டத்தில் பாராட்டுத் தெரிவிக்கப்பட்டது. இக்கூட்டம் குழுத்தலைவர் திரு க. பொன்னம்பலம் தலைமையில் நடைபெற்றது திரு. எம். எஸ். அரியநாயகம் செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டார்.

குழு உறுப்பினர் விபரம் வருமாறு: ச. சம்பந்தகுமார், த. சகாதேவன், இ. இராசேந்திரம், கே. தர்மரத்தினம், என். அருணாசலம் வி. எஸ். சிவகுரு, ரி. ஜெயசிங்கம், ஏ சிறீஸ்கந்தராசா. வி. இராசநாயகம்.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### செவ். 25. 4. 72

(செய்திகள், காலை 6-30 பகல் 12-45, மாலை 6,00 இரவு 9-00)

காலை-6-15 மங்கள வாத்தியம், 6-20 சைவநற்சிந்தனை ம. நமசிவாயம், 6-25 இஸ்லாமிய நற்சிந்தனை 6-40 அறிவிப்புகள், 6-50 பக்திப் பாடல், 7-15 கானமஞ்சரி 7-30 மாகாணச் செய்திகள், 7-35 குரலவகை, 8-00 இசைவேளை- 1. பாரதி கிருஷ்ணசாமி, 2. வீணை வதி இரத்தினசிங்கம் 8-15 இஸ்லாமிய கீதம்

இரவு 6-10 அறிவிப்புகள் 6-15 கலங்கரை விளக்கு: நடத்துபவர்-சர்மா அண்ணா, 6-30 இளைஞர்: ஈ சுப்பையாபிள்ளை, 7-00 தமிழ்மூலம் சிங்களம், 7-15 கமமும் புலமும்: கமத் தொழிற் றிணைக்களத் தகவற்பிரிவினர் அளிக்கும் நிகழ்ச்சி. 7-30 உலகச் செய்திகள் 7-35 வாத்தியகோஷ்டி. 7-45 கவியரங்கம்: நிகழ்ச்சியில் கலந்துகொள்பவர்: கவிரசத்தி, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-10 அறிவிப்புகள் 9-30 கலைக்கோலம் நடத்துபவர்: சில்லையூர் செல்வராஜன் 10-00 நேயர் விருப்பம்.

—

## புதுவருட நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், செவ் சாத்தையரியடை ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் தர்ம பரிபாலன சபையின் முப்பத்தாறுவது வருடாந்தப் பொதுக் கூட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை திரு அ சுந்தரையா தலைமையில் நடைபெற்றது

பின்வருவோர் புதுவருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர் தலைவர்: திரு அ சுந்தரையா, உபதலைவர்கள் திருவாளர்கள்; வைசெல்லையா வி ஏரம்பமூர்த்தி செயலாளர்: திரு வ கந்தசாமி பொருளாளர்: திரு ஆர் வி சுப்பையா செட்டியார், உப செயலாளர் திரு மு க இரத்தின வேலுப்பிள்ளை 15 பேர் கொண்ட நிர்வாகசபையும் தெரிவு செய்யப்பட்டது.

இக்கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன

ஆலயத்திற்கு அவசியம் தேவையான திருப்பணி வேலைகளைச் செய்து முடித்தல்

சமயக் கல்விப் போதனைக்கு ஏற்ற ஒழுங்குகள் செய்தல்

குறிப்பிட்ட காலங்களில் ஆலய பூசை, விழா என்பன நடைபெற ஒழுங்கு செய்தல்

—

## கோயில் வளவு சுவீகரிக்கப்படும்

சுழிபுரம். திங்கள் வட்டுக்கிழக்கு கிராம சேவையாளர் பிரிவிலுள்ள கோயில் வளவு அரசாங்கத்திலுக் பொறுப்பேற்ற நிலமற்றவர்களுக்குப் பங்கிடு செய்யப்படவுள்ளது

வளவின் விஸ்தீரணம் யாவும் கணக்கெடுக்கப்பட்டு சகல பத்திரங்களும் வட்டுக்கிழக்குக் கிராமசேவையாளரால் வல் மேற்குக்காரியாதிகாரியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இந்தியாவிலுள்ள கோவிலுக்குச் சொந்தமான இவ்வளவில் சிறுபான்மைத் தமிழர்கள் சிலர் வசித்து வந்தனர். இவ்விடத்திலுள்ள நிலம் குடியேற்றத் திட்டத்துக்காகப் பங்கிடு செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது

கிரிக்கெட் போட்டி

# கண்டி -- யாழ். இன்று மோதும்

யாழ்ப்பாணம், செவ். 18 வயதுக்குட்பட்ட வடமாகாண பாடசாலை தெரிவுக் கிரிக்கெட் கோஷ்டிக்கும், மத்தியமாகாண பாடசாலை தெரிவுக் கிரிக்கெட் கோஷ்டிக்குமிடையிலான கிரிக்கெட் போட்டி இன்று கண்டியில் நடைபெறும்.

வடமாகாண பாடசாலைக் கோஷ்டிக்கு இலங்கை பாடசாலை தெரிவுக் கோஷ்டி வீரர் கே. எம். சாந்திக்குமார் தலைமைதாங்குகின்றார். அகில இலங்கைப் பந்துவீச்சு வீரரான இவர் யாழ். மத்திய கல்லூரி வீரர் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கை பாடசாலை கிரிக்கெட் சங்கத்தினால் 18 வயதுக்குட்பட்ட மாகாணப் பாடசாலைகள் தெரிவுக் கோஷ்டிகளிடையே இந்தப் போட்டி நடாத்தப்படுகின்றது.

மத்திய மாகாண கிரிக்கெட் கோஷ்டிக்கு எஸ். குணதிலக்கா தலைமை தாங்குகின்றார்.

வடமாகாணக் கோஷ்டியில் அங்கம் வகிக்கும் வீரர்களின் விபரம் வருமாறு:

கே. எம். சாந்திக்குமார் (காப்டன்), ஜி. எஸ். மில்ஸ் (உப-காப்டன்), டபிள்யூ. ரவீந்திரன், ஏ. றவீந்திரன், ஆர் செல்வக்குமார், எம். சண்முகரத்தினம், சி. ஜே. மில்ஸ் ஜி. ஜெ குணசேகரம், எஸ், சுரேந்திரநாத், வி. சந்தணசீலன், கே. மதிவண்ணன், எம். சுந்தரராஜ், கே. மனோகரன், ரீ. சந்திரகுமார். (தேநி)

யாழ்ப்பாண

## உதைபந்தாட்ட முடிவுகள்

யாழ்ப்பாணம், செவ். யாழ். உதைபந்தாட்டச் சங்கத்தினால் யாழ். மாவட்ட விளையாட்டுக் கழகங்களிடையே நடாத்தப்பட்டு வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் நாவாந்துறை சென். மேரீஸ் கழகத்துக்கும், கிறீன்பீல்ட் கழகத்துக்குமிடையே நடைபெற்ற "ஏ" பிரிவுப் போட்டியில் சென். மேரீஸ் 2-0 கோல்களால் வெற்றி பெற்றது.

இப்போட்டிக்கு திரு ஈ சே குணரெத்தினம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

புனிதவளன் கழகத்துக்கும், பதிரி பொம்பலி கழகத்துக்குமிடையில் நடைபெறவிருந்த மற்றுமொரு போட்டியில், மைதானத்தில் புனிதவளன் கழகம் மட்டுமே காணப்பட்டது. எதிர் கோஷ்டி போட்டி ஆரம்ப நேரம்வரை மைதானத்துக்கு வரவில்லை. (தேநி)

## உற்சவம்

யாழ்ப்பாணம், செவ். யாழ்ப்பாணம் அனைக்கரை வண்ணைமருதடி ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் ஆலய (நாச்சிமார் கோவில்) வருடாந்த மகோற்சவம் சென்ற 14-ந் திகதி முதல் கொடியேற்ற உற்சவத்துடன் ஆரம்பமாகி சிறப்பாக நடைபெற்றுவருகின்றது: இம்மாதம் 27-ந் திகதி வியாழக்கிழமை தேர் உற்சவமும் (சித்திரத் தேர்), அடுத்தநாள் தீர்த்தோற்சவமும், மறுநாள் சனிக்கிழமை பூங்காவனமும் நடைபெறும்.

(இமை. நி)

0 0 0

இமையாணன், செவ். இமையாணன் வல்லை வாழிப் பிள்ளையார் கோவில் வருடாந்த உற்சவம் இன்று ஆரம்பமாகி தொடர்ந்து பத்து நாட்கள் நடைபெறும்.

—

## பெண்கள் விவசாய திட்டத்தில் திருடினார்களாம்!

மீசாலை, திங். மிருசுவில் இளம் பெண்கள் விவசாயக் குடியேற்றத்திட்டத்தில் தண்ணீர் இறைக்கும் இயந்திரத்தின் பிரதானமானதோர் பாகமாகிய 'கல்வேற்றரை' திருடியதாக சந்தேகத்தின்பேரில் இருவர் கைது செய்யப்பட்டனர். இவர்களிடம் திருட்டுப்போன பொருள் இருந்ததாம்.

மிருசுவில் கிராம சேவகர் திரு என். கணபதிப்பிள்ளை பொருளுடன் சாவகச்சேரி பொலிஸ் அதிகாரியிடம் சந்தேக நபர்களை ஒப்படைத்தார். பொலிஸ் அதிகாரி இவ்விருவரையும் சாவகச்சேரி நீதவான் திரு. ஜெ. ஜீ. ஆசீர்வாதம் முன்னிலையில் ஆஜர்செய்தார்.

நீதவான் இருவரையும் தலா ரூபா 700, ரூ. 200 பிணையில் செல்ல விட்டு வழக்கை விசாரணைக்கு ஒத்திவைத்தார்.


# Tamil Culture in Ceylon

by

M. D. Raghavan

**Price Rs. 20/-**

In response to further demand a new stock of books are now available at

* Sri Lanka Book Depot., K. K. S. Road, Jaffna.
* Sanmuganathan Book Depot., K. K. S. Road, Jaffna.
* Sothida Vilasa Book Depot., 46, Grand Bazaar, Jaffna
* Eelanadu Limited, Jaffna.
* Sunzsons Tuition Service, Colombuthurai.

*Publishers :*

**Kalai Nilayam Limited, Colombo.**

# சிங்கள-தமிழ் எழுத்துகளுக்குள் மிக நெருங்கிய தொடர்பு

## கலாநிதி இந்திரபாலா கூறுகிறார்

குருநகர், திங். "சிங்கள எழுத்துக்கும் தமிழ் எழுத்துக்கும் மிக நெருங்கிய தொடர்பு இருப்பதை எழுத்தாய்வு செய்யும்போது காணக்கூடியதாக இருக்கின்றது. தமிழ் உயிர் எழுத்துக்களை எடுத்துக் கற்கும் சிங்கள உயிர் எழுத்துக்களுக்கும் தொடர்பை ஆராய்ந்தால் இந்த உண்மை தெளிவாகின்றது. இதனாலேதான் ஏற்பட்ட மாற்றமாகும். மூன்றாம் நூற்றாண்டின் பின்னர் இந்த எழுத்துக்கள் மாற்றமடைந்திருக்கின்றன. வடநாட்டு எழுத்துக்களும் இதே போலத்தான் இருந்திருக்கின்றன. இந்த எழுத்துக்களைக் கொண்ட பல சாசனங்கள் 1903-ல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதன் பின்னர்தான் இந்த எழுத்துக்களில் மாற்றம் ஏற்பட்டுள்ளன."

இவ்வாறு யாழ்ப்பாணத் தொல்பொருளியற் கழகம் நடத்தும் தமிழ்ச் சாசனவியல் விரிவுரைகள் தொடரில் இன்று உரையாற்றிய இலங்கைப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறைப் பேராசிரியர் கலாநிதி கா. இந்திரபாலா தெரிவித்தார்.

அவர் மேலும் உரைநிகழ்த்துகையில் "காலத்துக்குக் காலம் எழுத்து மாற்றங்கள் நடந்துள்ளதை 8-ம் நூற்றாண்டிலும் மூன்றாம் நூற்றாண்டிலும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. பாரசீக நாட்டிலும் வந்த தொடர்புகள் இப்படியே இருந்திருக்கின்றன. தமிழ்நாட்டிலும் இருந்தவர் மாற்ற நிலைகளை இலங்கையிலும் தொடர்ந்திருக்கின்றது. தமிழகத் தொடர்பு இல்லாத பகுதியானதால் சிங்கள எழுத்து வேறு உருவில் மாற்றமடைந்திருக்கலாம்" என்றார்.

---

### பாலர் பாடசாலை ஆசிரியைக்கு பயிற்சி

குருநகர், திங்கள் "பாலர் பாடசாலை ஆசிரியர்களுடைய கடமை மிகப் புனிதமானது. அதனைச் செவ்வனே செய்வதற்கு 'மொண்டிசொறி' முறையினை சரிவர உணர்ந்திருக்க வேண்டும்."

இவ்வாறு யாழ்ப்பாணம் பாலர் பாடசாலை ஆசிரியர் சங்கத்தின் பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய திரு. புதுமைலோலன் ஆசிரியர் குறிப்பிட்டார்.

சங்கத் தலைவி செல்வி புவனேஸ்வரி கந்தசாமித்துரை தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் இன்று தொடக்கம் தொடர்ந்து 6 மாத காலத்திற்கு பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கு பயிற்சி வகுப்புகள் நடத்துவதெனவும், பயிற்சி முடிவில் தராதரப் பத்திரம் கொடுப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

இந்த வகுப்புகளின் விரிவுரையாளர்களாக திருமதி வேதவல்லி கந்தையா, செல்வி சந்தானலக்ஷ்மி கந்தப்பு, திருமதி இ. ஆனந்தகுமாரசாமி, திரு. புதுமைலோலன் ஆகியோரை அழைப்பதென முடிவுசெய்யப்பட்டது.

•••

### உற்சவம்

யாழ்ப்பாணம் செவ். சண்டிலிப்பாய் சீரணி ஸ்ரீ நாகபூஷணி அம்மன் தேவஸ்தானத்தில் இம்மாதம் 28ந் திகதி ரதோற்சவமும் அன்று மாலை தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

---

# தங்கம்மா அப்பாக்குட்டிக்கு 'திருவாசகக் கொண்டல்'

## மலேஷியாவில் பட்டமளிப்பு

கோலாலம்பூர், ஏப் 24 சிவத்தமிழ்ச் செல்வி, பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டிக்கு சிலாங்கூர் இளைஞர் சைவசித்தாந்த மன்றம் பாராட்டி, "திருவாசகக் கொண்டல்" என்ற பட்டத்தை வழங்கிக் கௌரவித்தது.

விசேஷ அழைப்பின் பேரில் மலேஷியாவில் இப்போது சொற்பொழிவாற்றிவரும் பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டிக்கு ஸ்கொட் ரோடு, கந்தசாமி கோவில் மண்டபத்தில் இந்தக் கௌரவம் அளிக்கப்பட்டது.

மலேஷிய தமிழ் அறிஞர்கள், பொதுமக்கள் திரண்டிருந்த இவ்வைபவத்தில் பண்டிதைக்கு பொன்னாடை போர்த்தப்பட்டதுடன், "திருவாசகக் கொண்டல்" என்ற பட்டமும் சூட்டப்பட்டது.

'தேனினும் இனிய திருவாசகத்தைத் தமிழே உருவான தமிழில் சுவைபட விளக்கமளித்து எமக்கு அளிக்கும் பண்டிதை அவர்களுக்குப் பொருத்தமான பட்டம்' என்று 'தமிழ்நேசன்' தினசரிப் பத்திரிகையின் ஆசிரியர் திரு. முருகு சுப்பிரமணியன் பாராட்டுரை வழங்குகையில் குறிப்பிட்டார்.

மலாயா பல்கலைக்கழக விரிவுரையாளர் திருமதி தேவபூபதி நடராசா, திரு. எஸ். அழகப்ப செட்டியார், சுவாமி பிரணவானந்தரைப் பற்றி ஆகியோர் பாராட்டுரை வழங்கினார்கள்.

செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி திருவாசகம் என்னும் பொருள் பற்றி சொற்பொழிவாற்றினார்.

---

# கள்ளுத் தவறணைகள்...

(2ம் பக்கத் தொடர்ச்சி)

வெட்டிப்பகுதி, 89 மல்லாகம் அளவெட்டி ரோட்டு வடபாலும் அளவெட்டி வ. தோ கூ. சங்க ரோட்டு மேற்குப் பகுதியுமான அளவெட்டிக்கிராமப்பகுதி, 90 மாவிட்டபுரம் கிராமம் முழுவதும் 91 கட்டுவன் வறுத்தலைவிளான் முழுக்கிராமப்பகுதியும் 92 மயிலிட்டி கட்டுவன் ரோட்டுக்கு மேற்கும் பருத்தித்துறை பிரதான வீதியின் தெற்குப் பக்கமான மயிலிட்டி வடக்கு கிராமத்தின் ஒருபகுதி. 93 பருத்தித்துறை பிரதான வீதியின் தெற்குப்பக்கமும் மயிலிட்டி கட்டுவன் வீதியின் கிழக்குப் பக்கமும் அமைந்த மயிலிட்டி வடக்குக் கிராமத்தின் ஒரு பகுதி. 94 மயிலிட்டி தெற்கு கிராமம் முழுவதும் 95 தவிடைக் கிராமம் முழுவதும் 96 புன்னாலைக்கட்டுவன் முழுவதும். 97 சுன்னாகம் மல்லாகம் ரோட்டுக்குத் தெற்கும் யாழ்ப்பாணம் காங்கேசன்துறை ரோட்டுக்கு மேற்கும் அண்டியுள்ள மல்லாகம் கிராமத்தின் ஒரு பகுதி. 98 ஏழாலைக்கிராமத்தின் மேற்குரோட்டு யாழ்ப்பாணம் மல்லாகம் ரோட்டிலிருந்து பிரியும் இறைவி ரோட்டு சந்திக்கும் மல்லாகம் மயிலங்காடு ரோட்டு ஏழாலை. 99 ஏழாலைக் கிராமத்தின் ஒருபகுதியும் மடத்துவாசல் ரோட்டுக்குடைக்கும் பக்கமும், 100 ஏழாலைக் கிராமத்தின் ஒருபகுதியும் தெற்கு மடத்துவாசல் ரோட்டுக்கும் கொட்டைக்காடு மயிலங்காடு ரோட்டுக்கு வடக்கும் பக்கமும். 101 இணுவில் கிராமத்தின் ஒருபகுதி யாழ்ப்பாண பிரதான வீதியின் மேற்குப் பக்கம். 102 இணுவில் கிராமத்தின் ஒருபகுதியும் யாழ்ப்பாணம் பிரதான வீதியின் கிழக்குப் பக்கமும் கைதடி ரோட்டுக்குத் தெற்குப் பக்கமும், 103 தாவடிக் கிராமத்தின் பகுதியும் சுதுமலை ரோட்டுக்கு வடக்காக அமைந்ததும், 104 தாவடிக் கிராமத்தின் பகுதியும் சுதுமலை ரோட்டுக்கு தெற்குப் பக்கமும், 105 உடுவில் கிராமசபைப் பகுதியும் சுன்னாகம் பட்டின சபை எல்லை நீங்கலாக சங்குவேலி கிராமம் முழுவதும் சுன்னாகம் பட்டினசபை எல்லை நீங்கலாக. 107 வட்டாரம் இல 1-காங்கேசன்துறைப் பட்டினசபை எல்லைக்குள், 108 வட்டாரம் இல 2 காங்கேசன்துறை பட்டினசபை எல்லைக்குள், 109 வட்டாரம் இல 3 காங்கேசன்துறை பட்டினசபை எல்லைக்குள். 110 வட்டாரம் இல 5 காங்கேசன்துறை பட்டினசபை எல்லைக்குள், 111 வட்டாரம் இல 4 காங்கேசன்துறைப் பட்டினசபை எல்லைக்குள். 112 வட்டாரம் இல. 1 சுன்னாகம் பட்டின சபை எல்லைக்குள் 113 வட்டாரம் இல. 2 சுன்னாகம் பட்டின சபைஎல்லைக்குள் 114 வட்டாரம் இல. 3 சுன்னாகம் பட்டின சபை எல்லைக்குள் 115 வட்டாரம் இல 4 சுன்னாகம் பட்டின சபை எல்லைக்குள் 116 சுன்னாகம் பட்டின சபை எல்லைக்குள் அமைந்திருக்கும் கந்தரோடைக் கிராமம் 117 சுன்னாகம் பட்டினசபை எல்லைக்குள் அமைந்திருக்கும் உடுவில்கிராமம்

### பருத்தித்துறை கலால் பகுதி

118 தொண்டமனாறு 119 கெருடாவில் 120 வல்வெட்டித்துறை 121 பொலிகண்டி 122 தும்பளை வடக்கும் கல்லியபுரமும் 123 அல்வாய் மேற்கு 124 அல்வாய் வடக்கு 125 அல்வாய் வடக்கு 126 பருத்தித்துறை 127 புலோலி கிழக்கு 128 தும்பளை வராத்துப்பளை கோவளம், 129 குடத்தனை கரையூர் மணல்காடு. 130 அம்பனை குடத்தனை 131 நாகர்கோவில் குடாரப்பு 132 கரணவாய் தெற்கு,133 கரணவாய் தெற்கு. 134 உடுப்பிட்டி 135 உடுப்பிட்டி 136 வல்வெட்டி. 137 கரணவாய் வடக்கு 138 இமையாணன். 139 கரவெட்டி மேற்கு. 140 கரவெட்டி கிழக்கு. 141 துன்னாலை தெற்கு. 142 கரவெட்டி வடக்கு. 143 அல்வாய் தெற்கு 144 புலோலி மேற்கு. 145 புலோலி தெற்கு.

### அச்சுவேலி கலால் பகுதி

146 வட்டார இலக்கம் 4 வளலாய். 147. வட்டார இல.4 தம்பாலை. 148 வட்டார இல. 8 பத்தைமேனி 149 வட்டார இல. 10 அச்சுவேலி 150 வட்டார இல.13 அச்சுவேலி. 151 வட்டார இல. 8 ஆவரங்கால் 152 வட்டார இல. 4 புத்தூர் கிழக்கு 153. வட்டார இல 15 புத்தூர் மேற்கு. 154 வட்டார இல 11 புத்தூர் மேற்கு. 155 வட்டார இல. 16 சிறுப்பிட்டி, 156 வட்டார இல. 3 நீர்வேலி வடக்கு. 157 வட்டார இல 6 நீர்வேலி தெற்கு. 158 வட்டார இல, 8 கோப்பாய் 159 வட்டார இல. 17 அச்செழு 160 வட்டார இல.6 உரும்பிராய். 161 வட்டார இல 4 உரும்பிராய், 162 வட்டார இல. 2 உரும்பிராய்

### சாவகச்சேரி கலால் பகுதி

163 நாவற்குளி. 164 தனங்கிளப்பு, 165 மறவன்புலோ. 166 கைதடி (1). 167 கைதடி (2), 168 கைதடி நுணாவில். 169 மட்டுவில் வடக்கு. 170 நுணாவில் கிழக்கும்மேற்கும், 171 சாவகச்சேரி தெற்கு. 172 சாவகச்சேரி வடக்கு. 173 சரசாலை, 174 மந்துவில், 175 மீசாலை வடக்கு. 176 மீசாலை தெற்கு. 177 கச்சாய். 178 கொடிகாமம், 179 உசன், 180 மிருசுவில், 181 எழுதுமட்டுவாள், 182 நாகர்கோவில். 183 இடைக்குறிச்சி, 184 வரணி இயற்றாலை, 185 வரணி வடக்கு. 186 இளவாலை, 187 முகமாலை. 188 இத்தாவில். 189 வண்ணான்கேணி, 190 புலோப்பளை, 191 முகாவில். 192 சோரன்பற்று. 193 செம்பியன்பற்று, 194 மருதங்கேணி, 195 முள்ளியான், 196 கோயில்வயல்.

### கிளிநொச்சி கலால் பகுதி

197 கணேசபுரம், 198 முரசுமோட்டை பகுதி, 199 அக்கராயன்குளம், 200 பரந்தன். 201 உருத்திரபுரம், 202 முரசுமோட்டை. 203 தட்டுவன்கொட்டி. 204 கண்டாவளை, 205 வட்டக்கச்சி, 206 புளியம்பொக்கணை. 207 வன்னேரிக்குளம், 208 மல்லாவி;

---

### சண்முகதாசன் அல்பேனியா பயணம்

கொழும்பு, திங்கள் பீகிங் சார்பு கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. என். சண்முகதாசன் நேற்று அல்பேனியாவுக்குப் பயணமானார். அவர் இலங்கை திரும்பு முன்னர் ஐரோப்பாவில் உள்ள வைத்திய நிபுணர்களிடம் தமது சுகவீனம் பற்றி ஆலோசனை பெறவிருக்கிறார்.

பயங்கரவாதிகள் இயக்கம் காரணமாக 10 மாத காலம் இவர் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்தார். நாட்டை விட்டுச் செல்வதற்கு அனுமதிப் பத்திரம் பெறுவதில் எவ்விதக் கஷ்டமும் இருக்கவில்லையென அவர் தெரிவித்தார்.

### நாடு திரும்புவோர்க்கு வேலைவாய்ப்பு

கொழும்பு, திங்கள் வெளிநாடுகளில் தமது பட்டப் படிப்பை முடித்துவிட்டு நாடு திரும்புவோருக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்படுமெனக் கல்வியமைச்சர் பதியுதீன் மஹ்மூத் தெரிவித்தார்.

இவர்கள் நாட்டுக்குச் சேவை செய்வேன் என்ற உடன்படிக்கையை அரசுடன் செய்து கொள்ளவேண்டும் என்றும் கூறினார்.

### தீவுப் பகுதி காரியாதிகாரி நடவடிக்கை

குருநகர், திங்கள் நயினாதீவு பௌத்த ஆலயத்திற்கும் சைவ ஆலயத்திற்கும் தினமும் பெரும் எண்ணிக்கையான யாத்திரிகர்கள் விஜயம் செய்வதால் இப்பகுதியில் குடிதண்ணீர் வசதியும் சுகாதார வசதியும் மிகமுக்கியமாகதேவைப்படுகின்றது. எனவே நயினாதீவுக்கு நியமிக்கப்படவேண்டிய சுகாதாரப் பரிசோதகரை உடன் நியமிக்க நடவடிக்கை எடுக்குமாறும் குடிதண்ணீர் திட்டமொன்றை மேற்படி இரண்டு ஆலயங்களுக்கும் அமைக்கநடவடிக்கை எடுக்குமாறும் தீவுப் பகுதிக் காரியாதிகாரி திரு பி. நடராசாசம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் யாழ் மாவட்ட அரசாங்க அதிபருக்கும் அறிவித்துள்ளார்.

---

### சந்திரத்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

வீரர்கள் மணிக்கு பத்தரை மைல் வேகத்தில் செலுத்தினர்கள். கட்டுப்பாட்டு நிலையத்தினர் அவர்களை எச்சரிக்கவேண்டி நேர்ந்தது.

சந்திர வெளியிலிருந்து பூமிநோக்கி புறப்படுவதற்கு முன் சந்திரனைச்சுற்றிய பாதையில் வீரர்கள் பிரயாணம் செய்கிறார்கள்.

சந்திரத்தரையிலிருந்து புறப்பட்ட 15 நிமிடங்களுக்கெல்லாம் தாய்க்கலம் தெரிவதாக வீரர்கள் கூறினர்கள். வியாழக்கிழமை பன்றி அவர்கள் பூமியில் வந்து இறங்குவார்கள்.

### சுவீப்...

1ம் பக்கத் தொடர்ச்சி

| | |
|---|---|
| 02 P 0900 | 15 P 0147 |
| 16 P 0140 | 19 P 0554 |
| 22 P 0323 | 27 P 0631 |
| 01 Q 0167 | 15 R 0913 |
| 21 R 0372 | 21 R 0728 |
| 24 R 0885 | 06 S 0503 |
| 13 S 0526 | 17 S 0922 |
| 24 S 0055 | 32 S 0409 |
| 03 T 0516 | 19 T 0876 |
| 21 T 0054 | 04 U 0342 |
| 04 U 0542 | 12 U 0012 |
| 28 U 0259 | 01 V 0562 |
| 31 V 0119 | 05 W 0643 |
| 30 W 0357 | 10 W 0258 |
| 13 W 0982 | 16 W 0428 |
| 02 X 0045 | 03 X 0503 |
| 06 X 0117 | 06 X 0945 |
| 16 Y 0319 | 20 Y 0690 |
| 06 Z 0328 | 04 Z 0040 |
| 25 Z 0513 | 29 Z 0174 |

(இவையாவும் உறுதிப்படுத்தப்படவேண்டியவை.)

### மே தினம்

கொழும்பு, திங்கள் தொழிலாளர் தினமான மே தினம் கொண்டாட்டங்கள் இவ்வருடம் அமைதியான முறையில் இருக்குமென அரசியல் வட்டாரங்கள் கருதுகின்றன.

---

### விற்பனைக்கு

தெல்லிப்பழை பலநோ. கூ. சங்கத்தில் 7500க்கு மேற்பட்ட வெற்றுச் சாக்குகள் கேள்விப்பத்திர மூலம் விற்பனைக்கு இருக்கின்றன. 28-4-72க்கு முன்னர் ரூபா 200/- மேற்படி சங்க அலுவலகத்தில் கட்டி கேள்விப் பத்திரத்தைப் பெற்றுக் கொள்ளவும் கேள்விப்பத்திரம் 28-4-72 பகல் 12 மணிக்கு முன்னதாகக் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கவும்.

அ. மாணிக்கவாசகர்
பொது முகாமையாளர்
4139

